# குமுதினி

## படுகொலையின் 20ம் ஆண்டு நினைவு மலர்




சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையம்

INCC

INTERNATIONAL NEDUNTHEEVU COORDINATING CENTRE

15.05.2005

www.tamilarangam.net


## கிறான்புறுக் சட்டத்தரணிகள்

# Cranbrook
s o l i c i t o r s

79 Cranbrook Road Ilford Essex IG1 4PG

குடிவரவு
Immigration

வீடு/கடை கொள்வனவு விற்பனை
Conveyancing

குற்ற வழக்குகள்
Criminal Litigation

குடும்பம்
Familiy

பொது வழக்குகள்
Civil Litigation

வீட்டு வாடகைப் பிணக்குகள்
Landlord & Tenant

விபத்துகளினால் ஏற்பட்ட காயங்களுக்கான நட்ட ஈடுகள்
Personal Injury Compensation

காவல் நிலையத்திலான சட்ட ஆலோசனையும் உதவியும்
Advice & Assistance at Police Station

ஜீவா டானியல் கைலாஷ் சபாபதி
ஷப்னம் அஸிஸ்

தொலைபேசி
**020 8553 9944**

தொலைநகல்
**020 8553 9985**

BELAVAN GRAPHICS




தொடர்புத் தொலைபேசி இலக்கங்கள்:

திரு S.R. பசுபதி: 0208 220 4869
திரு க. இரத்தினராசா: 0208 364 4566
திரு ஜீவா டானியல்: 0208 491 7706

INCC

## சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையம்
## INTERNATIONAL NEDUNTHEEVU COORDINATING CENTRE

President: Mr. S. Ratnarajah
Director-General: Mr. V.I.N. Pathmakumar
Secretery-General: Mr. Jeeva Daniel
Tressurer: Mr. S.R. Pasupathy
Members: Mr. K. Sothirajah
Mr; M. Sivarajah
Mr. V. Aravinthan
Mr. N. Baskaran
Mr. P. Kamal
Mr. K. Shanthalingam

107 School Road, Tilehurst, Reading, RG31 5BG
Tel: 0044 118 9419360 Fax: 0044 118 9417219
E-mail:incc@neduntheevu.com



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஆண்டாண்டு காலமாக நினைவு கூறப்படவேண்டியவர்கள்

அன்பார்ந்த எமது தீவக உறவுகளே!
அடிப்படைத்தேவைகள் முதல் உயர் தொழில்நுட்பம் வரையிலான சகல தேவைகளையும் அடையாளம் கண்டு அவற்றை மேம்படுத்துவதவதற்காக இம்மையம் நிறுவப்பட்டுள்ளது. உதாரணமாக நன்னீர் வளப்பெருக்கம், போக்குவரத்துவசதி, உற்பத்தித்திறன், சந்தைப்படுத்தல் போன்ற அத்தியாவசியமான தேவைகளை மேம்படுத்த வேண்டிய அவசியத்தையும், அவசரத்தையும் புரிந்துகொண்டு செயற்பட இம்மையம் உறுதிபூண்டுள்ளது.

மேற்கூறியது போன்ற பாரிய திட்டங்களைச் செயற்படுத்துவதற்குத் தேவையான நிதி, தொழில்நுட்பம், ஆட்பலம் போன்றவற்றைத் திரட்டுவதில் வெற்றிகாண வேண்டுமானால் சர்வதேசமெங்கும் பரந்து வாழும் எமது தீவகத்தோரதும், தீவகம்சார்ந்தவர்களதும், ஏனைய நலன்விரும்பிகளதும் ஆதரவு, உதவி, முயற்ச்சி போன்றவற்றை ஒருங்கிணைக்க வேண்டியது மிக அவசியமாகிறது. இலங்கைக்கு வெளியே வெவ்வேறு நாடுகளில் தனித்து இயங்கும் நெடுந்தீவு சார்ந்த சங்கங்கள் அந்தந்த நாடுகளில் வாழும் எம்மக்களுக்கும், நெடுந்தீவுக்கும் பெரும் சேவை ஆற்றிவருகின்றன என்பது எனக்கு நன்கு தெரியும்.

எம்தீவக மக்கள் குடியேறியிருக்கும் வெளிநாடுகளில் தீவின் முன்னேற்றத்துக்கான சங்கங்களையோ, ஒன்றியங்களையோ ஆரம்பித்துச் செயற்பட வேண்டியது அவசியம் என்பது மையத்தின் கருத்தாகும். இவ்வாறான அமைப்புக்களின் பலத்தை ஒன்று திரட்டுவதன் மூலம் பலம்வாய்ந்த திட்டங்களையும், திட்டவரைவுகளையும் உருவாக்கவும், செயற்படுத்தவும் முடியும். அல்லாமலும் அப்படியான திட்டவரைவுகளை அரசசார்பற்ற நிறுவனங்கள்,சர்வதேச உதவிவழங்கும் நிறுவனங்கள், சர்வதேச அரசாங்கங்கள் முதலியவற்றுக்குச் சமர்ப்பித்து அவற்றைச் செயற்படுத்தும்படியோ நிதி உதவி தரும்படியோ நாம் கேட்கலாம்.

எமது தீவு மிக மிக தொன்மையானது இராமயண காலத்துக்கும் முற்பட்டது இராமயண யுத்தத்தில் அனுமான் சஞ்சீவி மூலிகை மலையை எடுத்துக் கொண்டு வான் மார்க்கமாக வந்த போது மூலிகை மலையின் துண்டு உடைந்து எம் தீவு மேல் விழுந்தது என காவியங்கள் கூறுகின்றது இதன் உண்மை இன்றும் தீவில் அரிய மூலிகைகள் இருப்பது சான்று வெடியரசன் .வீகாமன் ஆண்டதீவு இன்றும் இவர்களின் அரண்மனைகள் எம் தீவில் சிதைந்த நிலையில் இருந்து சான்று பயக்கின்றது இன்று வாழும் நாம் சோழப் பேரரசு பிரதானியாக இருந்த சேய்யூர் தனிநாயகமுதலியார் பரம்பரை என்று யாழ்ப்பாண





வைபவ மாலை கூறுகின்றது. தனிநாயகமுதலியார் காலத்தில் தீவின் மேற்கில் உள்ள பெரியதுறையில் இருந்து இராமேஸ்வரக் கோயிலுக்கு அபிசேகம் செய்யப் பாலும் பூமுனையிலிருந்து பூவும் கொண்டுசென்றதாக கர்ண பரம்பரைக் கதையொன்று கூறுகின்றது.

இவ்வாறு தொன்மையான வரலாற்றையும் சான்றுகளையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் நெடுந்தீவு செறிந்த மக்கள் தொகையும் குடிசன நெருக்கமும் வளங்கள் அனைத்தும் வளப்படுத்தப்பட்ட உச்சநிலையில் திகழ்ந்தது வன்னிக் குடியேற்றம் எம் தீவின் உச்சநிலையில் இருந்த அனைத்தையும் அடிநிலைக்கு கொண்டு வந்தது எவ்வாறு என்றால் பெரும் தொகையான எம் மக்கள் வன்னிக்கு குடிபெயர்ந்ததால் பல தொகையான வீடுகள் குடியில்லாமல் பாழடைந்தது பல ஏக்கர் நிலப்பரப்பு வளப்படுத்தப்படாமல் வள்மற்று சிதைவடைந்து செழிப்பில்லா நிலமாக காட்சியளிக்கின்றன.

இன் நிலையிலும் உறுதியுடன் இறுதிவரை இங்கு வாழ்ந்த மக்களை 1985 .05 15திகதி விடியல் காலை நெடுந்தீவிலிருந்து குறிகாட்டுவான் சென்ற குமுதினி பிரயாண படகை சிறிலங்கா கடல்ப்படை வழி மறித்து பிரயாணிகளை வெட்டியும் குத்தியும் சுட்டும் படுகொலை செய்யப்பட்டு 20வது ஆண்டுகள் கழிந்து விட்ட நிலையில் அவ்வனர்த்தத்தால் மரணித்த உறவுகளின் ஆத்மசாந்திக்காக மட்டுமின்றி எமது போராட்ட வரலாற்றில் இடம் பிடித்த 36 ஆத்மாக்கள் ஆண்டாண்டு காலமாக நினைவு கூறப்படவேண்டியவர்கள் என்பதால் 10வது ஆண்டை இடம் பெயர்ந்து யாழப்பாணத்தில் இருந்த போது யாழ் சென் ஜோன்ஸ் கல்லூரியில் இலங்கை செஞ் சிலுவை சங்க நெடுந்தீவு பிரிவு சார்பாக நடாத்தி பின்பு ஐக்கிய இராச்சியத்தில் நடத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோன்.

இவ் அனர்த்தம் நடந்த போது குறிப்பாக புங்குடுதீவு மக்களும் மற்றும் ஏனைய உறவுகளும் சேர்ந்து உதவி செய்ததால்தான் பல உயிர்கள்காப்பாற்றப்பட்டன ஆதலால் அவர்களும் ஆண்டாண்டு காலம் நன்றி கூறப்படவேண்டியவர்கள்.

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயத்தில் கூடியிருக்கும் அனைவருக்கும் குமுதினி எனும் நினைவு மலருக்கு விளம்பரம் தந்து உதவிய உறவுகளுக்கும் மலருக்கு செய்தி தந்தவர்களுக்கும் மைய நிறுவக சார்பாக எனது நன்றியும் அன்பையும் தெரிவித்துக் கொள்கின்றோன்.

மைய நிறுவனர்
வ.ஐ.ந.பத்மகுமார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நீங்கா நினைவலைகள் ............

கடந்த இருபது ஆண்டுகளுக்கு முன் இதே நாளில் அதாவது 15-05-1985 அன்று பல நினைவுகளைச் சுமந்தபடி பயணம் செய்யும் மக்களை ஏற்றிக்கொண்டு நீலக் கடலின் ஆர்பரித்த அலைகளின் மத்தியில் குமுதினி பயணித்துக்கொண்டிருந்தாள். தமிழீழத்தின் தலைப்பாகமாக விளங்கும் யாழ் தீபகற்பத்தின் மிக அணித்தாய் முத்துக்களாக விளங்கும் சப்த தீவுகளில் மிகப்பெரிதாயும், தனித்துவமான பிரதேச செயலகத்தையும், தன்னகத்தே கொண்டு இந்துசமுத்திரத்தின் அழகிய தீவாய் விளங்குவதே நெடுந்தீவாகும். இங்கு வாழும் மக்கள் ஏனையத்தீவுகளுடன் தொடர்புகொண்டு, யாழ் நகருக்கோ, அல்லது பிற இடங்களுக்கோ செல்வதற்காக இந்தக் குமுதினியே ஓர் உன்னதமான வழித்துணையாவள். அந்தக் குமுதினி, ஆழ்கடலில் அலைகளின் ஆர்ப்பரித்து ஆடி ஆடி வரும் அழகே ஓர் தனித்துவமாகும். அந்தக் குமுதினியே, இந்த நாளில் இரத்தம் தோய்ந்தவளாக காணப்பட்டாள். ஏனெனில், அவளின் முதுகில் பயணித்த ஒன்றுமறியாத மக்களை, இலங்கையின் கடற்படை கொன்றொழித்து குமுதினியின் அழகையே அழித்தனர். தமிழீழத்திற்கான விடுதலை வேண்டி, போராட ஆரம்பித்த நாள்முதல், இலங்கை அரசாங்கத்தின் கூலிப்படைகளால் கொல்லப்பட்ட பொது மக்கள் பல்லாயிரக்கணக்கில் அடங்குவர். அவ்வகைக் கொடூரக் கொலைகளில் குமுதினிப் படகுக் கொலை அனைத்து தமிழ் மக்களின் நெஞ்சில் நீங்கா வடுக்களாக அமைந்துள்ளது. ஒன்றுமறியாத நெடுந்தீவு மக்களை, இக்குமுதினிப்படகில் கொன்றதன் மூலம், இலங்கை அரசாங்க வரலாற்றில் ஓர் கறையை ஏற்படுத்தியது எனலாம். அவ்வாறு கடந்த இருபது வருடங்களுக்கு முன் கொல்லப்பட்ட மக்களின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

மேலும், சர்வதேசம் எங்கும் வாழும் நெடுந்தீவு மக்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளை ஒன்றிணைத்து, அவர்களின் சிந்தனை, பங்களிப்பு, அறிவியல், சமுகக் கலாச்சாரப் பண்பாடுகள் என்பனவற்றை ஒன்றிணைக்கும் அமைப்பே **"சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையம்"** ஆகும். இவ்வமைப்பின் தலையாய கடமை புலம்பெயர்ந்து வாழும் இத்தீவின் மக்களின் சிந்தனையை தாயகம் நோக்கியதாகவும் எதிர் காலச் சந்ததியினருக்கும், எமது தேசம், தேசியம், சுயநிர்ணயம், எமது பாரம்பரியமான சமூக விழுமியங்கள் என்பவற்றை அவர்கட்கு தக்க காலத்தில் புகட்டுவதோடு மட்டுமன்றி, அவர்களின் அனைத்து செயற்பாடுகளையும் ஒன்றிணைத்து நெடுந்தீவில் வாழும் மக்களின் வாழ்வியல் தேவைகள், மாணவர்களுக்கான கல்வித்தேவைகள் என்பவற்றோடு தமிழீழத்தின் அபிவிருத்திப் பணிக்காக அவர்களை ஈடுபடுத்தல் என்பனவற்றை நல்லவிதமாக முன்னெடுக்கின்றனர். அவ்வகையில் இவர்களின் செயற்பாடு நன்றாக அமைய எல்லாம் வல்ல என்பீல்ட் நாகபூசணி அம்பாளின் பாதம் பணிந்து வாழ்த்துகின்றோம்.

வாழ்க வளமுடன்.

இங்ஙனம்.

சிவ ஸ்ரீ இரகுநாத கமலநாதக்குருக்கள்.
B.A. (Hons.)
பிரதமகுரு என்பீல்ட் நாகபூசணி
அம்பாள் ஆலயம்.





**Most Rev. Dr. Rayappu Joseph, Bishop of Mannar**
**Bishop's House, Mannar, Sri Lanka.**

Tel- 023 2232503; 2232710 Fax. 023 2232709
E-Mail : bisman@sltnet.lk or jrayappu@yahoo.com

### மன்னார் ஆயர் இரா. யோசேப்பு அவர்களிடம் இருந்து செய்தி

சர்வதேச அரங்கிலே, நெடுந்தீவு மக்களை ஒருங்கிணைக்கும் மையம் ஒன்று ஐக்கிய இராட்சியத்தில் செயல்பட்டுவருவது இம்மண்ணின் உறவுகளுக்கெல்லாம் ஒரு சிறப்பைச் தந்து கொண்டிருக்கிறது.

எம் தாய் மண்ணிலே தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் எம் மக்களின் வளர்ச்சிக் கேற்ற வளங்களைப் பெருகச் செய்வதே இந்த மையத்தின் நோக்கம் என்பதை எண்ணும் போது உவகை பொங்குகிறது. இதில் சம்மந்தப்பட்ட அனைத்து நல் உள்ளங்களையும் நான் பாராட்டுகின்றேன்.

மேற்படி மையம், அன்று எமது உடன் பிறப்புக்களுக்கு எதிராக இளைக்கப்பட்ட "குமுதினி" கோர அனர்த்தத்தின் 20ம் ஆண்டு நிறைவிலே, சிறப்பு வழிபாட்டுடன் நினைவு மலரும் வெளியிடுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன். நான் கண்ட இந்தக் கோர நிகழ்வு எனது இதயத்தை இன்றும் வாட்டிக் கொண்டேயிருக்கின்றது.

இந்த நினைவுகூருதலானது எமது இதயங்களைத் திரும்பவும் புண்படுத்திக் கொள்வதற்காகவோ அன்றேல் இதில் பச்சிழம் பாலகர்களையும் கொன்றுகுவித்தவர்கள் மேல் உள்ள எமது கோபத்தைத் தீவிரப்படுத்து வதற்காகவோ அல்ல என்பது தெளிவு. மாறாக இப்படிபட்ட இவர்களுக்காகவும் இறைவனிடம் மன்னிப்புவேண்டி, நம் இறந்த உடன் பிறப்புக்களுக்கு, ஆன்ம சாந்தியையும்; உற்றாருக்கு மன அமைதியையும் வேண்டுவதே இதன் முதல் நோக்கமாக அமைகின்றது. மேலும் இப்படிப்பட்ட கோரநிகழ்வுகள் மனித இனத்துக்கே இழுக்கைக் கொணர்பவை என்பதை உலகிற்கு வெளிப்படுத்துவதும் இதன் நோக்கமாக அமையும்.

இந்த நல் நோக்குகளோடு "குமுதினி" அனர்த்தத்தை நினைவுகூரும் அன்பர்கள் அனைவரோடும் இணைந்து கொண்டு எனது அன்பைத் தெரிவித்து நிற்கிறேன்.

இப்படிக்கு
+ இரா. [signature]
மன்னார் ஆயர்
22.04.2005.

*To serve the Lord in all humility* Acts 20/19



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

1ம் மாடி,
ச.த.மா.பேரவைக் கட்டிடம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
16.04.2005

சிறிலாங்கா தேசத்திற்கு சுதந்திரம் பெற்றுக்கொள்ளப்படும் வரை இலங்கை தீவில் வாழ்ந்த சிங்களத்தலைவர்களை விடவும் தமிழ் தலைவர்கள் மாபெரும் அர்ப்பணிப்புகளை செய்ததின் விளைவாகவே 1948ல் இலங்கை சுதந்திரமடைந்தது. சுதந்திரத்தின் பின் மாறிமாறி ஆட்சிப்பீடம் ஏறிய சிங்கள அரசில் தலைவர்கள் ஒவ்வொருவரும் பௌத்த பேரினவாத சித்தாந்தத்தின் அடிப்படையில் செயற்படத் தொடங்கினார்கள்.

இலங்கையில் உள்ள தமிழர்களை அழித்து இலங்கையை பௌத்த சிங்கள நாடாக்க வேண்டும் என்பதில் முனைப்பாக செயற்பட்டார்கள் இதற்காக சிங்களம் மட்டும் சட்டத்தினை கொண்டு வந்து தமிழ் மொழியை அழிக்க முனைந்தார்கள்.

தமிழர்கள் பாரம்பரியமாக ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வாழ்ந்து வந்த தாயக பூமியான இலங்கை தீவின் வடக்கு கிழக்கு பகுதிகளில் இருந்த தமிழர்களின் வாழ்விடங்களில் இருந்து அவர்களை விரட்டியடித்து விட்டு சிங்கள குடியேற்றங்களை உருவாக்கினார்கள்.

தமிழர்களை படுகொலை செய்வதன் மூலம் தமிழினத்தை அழித்து விட முனைந்தார்கள் இவ்வாறான நேரடியான படுகொலை முயற்சிகளின் வரிசையிலே தென்னிலங்கையில் இனக்கலவரங்கள் என்ற போர்வையில் நடைபெற்ற படுகொலைகள் மற்றும் வடக்கு கிழக்கு பகுதிகளில் கொக்கட்டிச்சோலை, உடும்பின் குளம், சத்துருக்கொண்டான், வந்தாறு மூலை, வெலிக்கடைச் சிறை, புதுக்குடியிருப்பு, மடுமாதா, ஆலயம்,





நவாலிதேவாலயம், நாகர்கோவில் பாடசாலை, குமுதினிப்படகு ஆகிய சில படுகொலைச் சம்பவங்களை உதாரணமாக கொள்ளலாம்.

அந்தக்காலம் தமிழர்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கைகள் சிங்களப் பேரினவாதத்தினால் முழு மூச்சாக முன்னெடுக்கப்பட்ட காலம் தமிழீழ தேசத்தின் தரையிலும் கடலிலும் சிங்கள ஆக்கிரமிப்பு இராணுவத்தினதும் கடற்படையினதும் கொலை வெறி தாண்டவமாடிய காலம் தமிழ் மக்கள் மரணபயத்தோடுதான் வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருந்தார்கள். 1998.05.15 அன்றும் வழமை போல நெடுந்தீவில் மக்கள் தமது அன்றாட நடவடிக்கைகளுக்காக கடலிலே பயணம் செய்துகொண்டிருந்த போது இந்த கொடூரம் நிகழ்ந்தது.

அன்றைய தினம் குமுதினிப்படகு பயணம் செய்து கொண்டிருந்த போது படகை அண்மித்துவந்த சிறீலங்கா இனவெறிக்கடற்படையினர் படகை வழிமறித்து படகிலிருந்த அப்பாவித்தமிழ் பயணிகளை கொலை செய்ய தொடங்கினார்கள் கத்தியால் வெட்டியும், கோடாரிகளினால் கொத்தியும் துப்பாக்கியால் சுட்டும் குதறிக் கொன்று இரத்த வெறியாட்டம் ஆடினார்கள். தட்டிக்கேட்பதற்கு யாருமற்ற நிலையில் அப்பாவிகளான நம் நெடுந்தீவு உறவுகள் அழிக்கப்பட்டார்கள்.

அக்காலம் இவ்வாறான படுகொலைகளில் இருந்து எம்மக்களை பாதுகாப்பதற்காகவும் எமது மக்களின் நிலங்கள் பறிக்கப்பட்டுவதை தடுப்பதற்காகவும் இழந்த உரிமைகளை மீட்டெடுப்பதற்காகவும் எமது தேசியத் தலைவரினால் ஆயுதப்போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட காலமாகும்.

இவ்வாறான படுகொலைகள் மூலம் எமது விடுதலை உணர்வினை அடக்கி ஒடுக்கி தமிழினத்தை அழித்து விடலாம் என சிங்களம் கனவு கண்டது. ஆனால் அவர்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக ஆயிரமாயிரம் தமிழ் இளைஞர்கள் யுவதிகள் விடுதலைப்போராட்டத்தில் இணைந்துகொண்டு பலம் மிக்கதொரு இராணுவ சக்தியாக விடுதலைப்புலிகள் வளர்ந்து தமிழர்களின் பாதுகாப்பு அரணாக விளங்கினார்கள்.

ஒட்டுமொத்த தமிழ் மக்களின் ஒன்றுதிரண்ட சக்தியினால் கட்டியெழுப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் பலத்தின் பின்னால் தமிழீழ தேசியத்திற்கான நிர்வாகக்கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டடு வளத்தெடுக்கப்பட்டு வரும் இவ்வேளையில் "தமிழனுக்கொரு நாடில்லை, தமிழன் இல்லாத நாடுமில்லை" என்ற நிலை மாறி தமிழனுக்கொரு முகவரி எழுதப்பட்டு அவன் தலை நிமிர்ந்து வாழக்கூடிய சூழ் நிலை உருவாகியுள்ளது.

ஈழத்தமிழர்களினுடைய இனப்பிரச்சினை சர்வதேச கவனத்தினை ஈர்த்துள்ள நிலையில் கடந்த ஐம்பத்தைந்து ஆண்டு காலப்பகுதியில் சிங்களப் பேரினவாதத் தலைமைகள் எமது மக்களுக்கு இழைத்த அநீதிகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடிமறைத்து அதற்கான தடயங்களை அழித்து சர்வதேச சமூகத்தினை ஏமாற்றி இலங்கையில் உள்ள பிரச்சனை இனப்பிரச்சனையல்ல, அது புலிகளது பிரச்சனை என கூறி புலிகளைத்தனிமைப்படுத்தி பயங்கரவாத முத்திரை குத்தி அவர்களை அழிப்பதற்கும் அதன் மூலம் தமிழர்களை மீண்டும் ஏமாற்றி அடிமைகளலாக்குவதற்கும் சிங்களப்பேரினவாத தலைமைகள் முயன்று வரும் இவ்வேளையில் குமுதினிப்படகு படுகொலை போன்ற படுகொலை நிகழ்வுகளை நினைவுகூறுவது அவசியமானதாகும்.

எமது இனப்பிரச்சினை சர்வதேச கவனத்தினை ஈர்த்துள்ள இவ்வேளையில் சிங்கள அரசு தமிழர்கள் மீது மேற்கொண்ட இன அழிப்பின் கறைபடிந்த சம்பவங்களை மூடிமறைத்து புலிகளைத்தனிமைப்படுத்தி தமிழ் மக்களையும் சர்வதேச சமூகத்தினையும் ஏமாற்றி மீண்டும் தமிழ் மக்களும் சிங்கள மக்களும் ஒன்றாக சேர்ந்து வாழ முடியும் எனக்கூறி எமக்கான அரசியல் தீர்வுகள் எதனையும் தராமல் ஏமாற்ற முயல்கின்றார்கள். இந்நிலையில் கடந்த காலத்தில் சிங்கள பேரினவாதத்தினால் எமக்கு இழைக்கபட்ட அநீதிகள், ஏமாற்று நடவடிக்கைகள் , படுகொலைகள் என்பவற்றை நினைவுகூறுவதென்பது பழிவாங்குவதற்கல்ல மீண்டும் ஒருதடவை நாம் ஏமாற்றப்படாமல் இருப்பதற்காகவே.

இந்த வகையில் புலம் பெயர்ந்து லண்டனில் வாழும் எம் தமிழ் உறவுகளிடையே தமிழ்தேசியம் பற்றியும் சிங்களப்பேரினவாதத்தின் கபடத்தன்மை பற்றியும் தெளிவையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்த கூடிய வகையில் குமுதினிப் படகுப்படுகொலை நிகழ்வின் 20 வது ஆண்டு நிறைவை நினைவு கூறுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டமை பொருத்தமானதாகும். அந்த வகையில் இந்த ஏற்பாடுகளை மேற்கொண்ட சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையத்திற்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவ்வண்ணம்

செ.கஜேந்திரன்.
பாராளுமன்ற உறுப்பினர்,
யாழ்ப்பாண மாவட்டம்.





# நெஞ்சைப் பிழிந்த துயரம்

நெடுந்தீவு எமது தாய்மண். இது பெரும் வரலாற்றுப் பூமி. இங்கே வாழும் மக்கள் இயற்கையின் செழிப்போடு அமைந்த சூழலில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள். பிரதானமாக பனைவளமும் தென்னைவளமும் நிறைந்து இயற்கை மூலிகளும் காணப்படுகின்ற சப்ததீவுகளில் பெரும் தீவாக விளங்குகின்றது. இது நாற்புறமும் கடலால்சூழப்பட்டிருக்ககூடிய அழகான பிரதேசமாகும். இங்கு நெல் சாமி மொண்டி மிளகாய் வெண்காயம் காய்கறி வகையை பயிரிட்டு தங்களுடைய மண்ணுக்குள்ளே முத்தெடுத்து உழைத்து வாழ்ந்தவர்கள். தம் கையே தமக்குதவி என்ற உறுதியோடு வாழ்ந்த எம்மக்களை கொன்றுபோட்ட கொடுமை.
எமது மக்களை கடந்த 15.05. 1985ம் ஆண்டு நெடுந்தீவிலிருந்து குறிகட்டுவானை நோக்கிச் சென்ற அரச பிரயாணிகள் படகான குமுதினியை இடைமறித்த சிங்கள கடற்படைக் காடையர்கள் எமது மக்களை கொடூரமாக கொலைசெய்து குவித்த நாள் இதுவாகும். எமது மண்ணும் மக்களும் அவலக்குரலெழுப்பிய இச்சம்பவம் நாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு பயங்கரமானது. உலகத்திலே மனித நாகரீகமற்றற ஈனக்கொலைபுரியக்கூடிய இந்த கொடியவரால் எமது மண்ணிலே செங்குருதிவடிந்து கடலும் செங்கடலாய் மாறிய கோலம். மக்களுடைய அவலக்குரல் இன்னமும் ஒலித்துக் கொண்டே இருக்கிறது. நானும் என்னுடைய தாய் தந்தையரையும் அண்ணன் பெரியப்பா மைத்துனர் மருமகன் ஆகிய ஆறு உறுப்பினர்களை இழந்து துடித்தவன்.இதுவார்த்தைகளில் எழுதமுடியாத வேதனை நிரம்பிய வரலாறு எமது விடுதலை போராட்டத்திலே இதுவும் எமது நெடுந்தீவு மக்களுடைய அர்ப்பணிப்பு என்றே கருதவேண்டும். இதிலே முதியவர்கள் பெண்கள் இளம்குடும்பத்தினர் இளைஞர்கள் சிறுவர்கள் குழந்தைகள் குமுதினிப்படகின் சேவையாளர்கள் அரச உத்தியோகத்தர்கள் இத்தனைக்கும் என்மதிப்புக்கும் வணக்கத்துக்குமுரிய என்னுடைய தமிழ் ஆசான் திரு க. சதாசிவம் ஆசிரியர் என்னால் மறக்கமுடியாதவர்.அவருடைய இழப்பு என்வாழ்வில் மாபெரும் இழப்பு அவ்வாறே என் ஆருயிர் நண்பரும் என்னுடைய ஒரேவகுப்பில் படித்த நண்பர் திருவாளர் கா. சாந்தலிங்கம் அவருடைய குடும்பத்தினரின் இழப்பும் என்மனதை வதைத்துவிட்ட நிகழ்வாகும். அமைதியான கிராமத்தின் உயிர் மூலத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



20 வருடங்களாகியும் உலுப்பிக்கொண்டிருக்கும் இந்த துயரச் சம்பவம் வாழ்விலே எவராலும் மறந்துவிட முடியாதது. இவர்களுடைய நினைவுநாளை இன்று பிரித்தானியாவிலே சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையத்தினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நினைவாஞ்சலி நிகழ்வின் மூலமாக எமது தீவகமக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்கு எம்மாலான முழுப்பங்களிப்பையும் ஆற்றிக்கொள்ள ஒவ்வொருவரும் திடசங்கற்பம் பூண்டு எடுத்தகாரியங்களை வெற்றியுடன் நிறைவேற்ற உறுதிகொள்வோம்.துன்பத்தின் பிடிகளுக்குள் துவண்டுபோன எம்மவர்க்கு அன்புக்கரம் நீட்டி ஆதரவு தருவோம். ஏம் அமைதியான தேசத்தை அழகுபடுத்தி வருங்காச் செல்வங்களை வளர்த்தெடுத்து கல்வி அறிவியல் கண்களைத்திறந்து காலத்தால் அழியாத புதிய உலகத்தைக் கட்டியெழுப்புவோம்.

இதனை இதன் கண் இவன்முடிப்பான் என்றாய்ந்து
அதனை அவன் கண்விடல் என்றான்

பொய்யாமொழிப்புலவன் திருவள்ளுவன் அவ்வாறே எடுத்த இக்காரியத்தில் எதிகாலக் கதவுகளைத்திறந்து தொடுக்கும் எமது தூயபணிகள் நம் தாயகத்தில் நாளை கொடுக்கும் பலன் என்பதில்· சிறிதேனும் ஐயமின்றி நடக்கத் துணிந்துவிட்டால் இந்த நானிலமும் நான்கு முழமென்றுணர்வாய் நாளை.

வாழ்க தமிழ் வளர்க நம் பணிகள் மலர்க புதிய சமுதாயம்.

அ. வேணுகோபாலன்





நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம் - கனடா
OLD STUDENTS ASSOCIATION OF DELFT SCHOOLS – CANADA
Registered No. # 1585865

## எம் இதயக் குமுறல்கள்

எமது மண்ணில் கறைபடிந்த வரலாற்றில்,
குமுதினிப் படுகொலை எல்லோர் மனதிலும் பசுமரத்தாணியாக பதிந்த,
மீளாத சோகமாகும்.
ஆயிரத்துத்தொளாயிரத்து எண்பத்தைந்து வைகாசி பதினைந்து,
எம் உறவுகளுக்கு என்ன சொல்லிப் பொழுது விடிந்ததுவோ தெரியவில்லை.
அது அவசர பயணமோ, அல்லது அவலப் பயணமா என்னவென்று சொல்லுவது.
சீரான வாடைக் காற்று வருடிக் கொடுக்க, தாயின் மடியில்துயில் கொண்ட
மழலையையும் சல்லாபித்து பயணிக்கும் நண்பர் கூட்டத்தையும், வியாபாரிகள், மற்றும்
மாணவர்களையும் சுமந்து கொண்டு வழமையான பயணத்தைத் தொடர்ந்தாள். அவள்
பயணத்தில் பாதகர் கூட்டம் பாய்ந்து நடத்திய வெறியாட்டத்தில் பதறியோரும்
படுகொலையுண்டோரும் நினைத்தாலே நிலைதடுமாறுகிறது பாவிகள்
பச்சிளம்பாலனையும் விட்டுவைக்கவில்லை. ஆண்டுகள் இருபதிலும் எம் உறவுகளின்
குருதிகாயவில்லை இதய ஓலங்களும் ஓயவில்லை. கடமை தவறாத குமுதினியோ
பாதிப்பேரை காப்பாற்றியது நெஞ்சம் மறக்கவில்லை.
குமுதினிப்படகில் கொலையுண்டு மரணித்த எம் இனிய உறவுகளுக்கு,
**நெடுந்தீவு பழைய மாணவர் மன்றம் - கனடா**
சார்பில் என் கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சு. நடராசா
(தலைவர்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## நெடுந்தீவு மக்கள் செயற்பாட்டு ஒன்றியம்
### Association de Projet & Développement de Delft

தலைவர்
M.SHANTHAKUMAR

உபதலைவர்
S.MAHENDRAN

செயலாளர்

உபசெயலாளர்
K.SIVANANTHARAJAH

பொருளாளர்
N.MATHANARANI

ஆலோசகர் குழு
S.KUMARASAMY
M.POOBALASINGAM
K.PUNNIYAMOORTHY
P.GANESALINGAM
K.NEDUNCHELIAN
A.JEYAKUMAR
R.RATNARAJAH

**மாவிலிக் கரையில் மரணித்த உறவுகளே...**

வருடங்கள் இருபது உருண்டோடிவிடினும்
எம்முடன் நீவிர்
வாழ்ந்திட்ட நினைவுகள் மறந்திடுமோ ?
பாவியரின் கொடுங் கோ (கொ) ல் ஆட்சி
பசுத்தீவின் பூமகரை
பலியெடுத்த நாளதனை (15-05-85)
இப்புவி உள்ள நாள்வரை
மறந்திடத்தான் கூடிடுமோ ?
வளமார் புவி மக்களின் விழிகளில்
வழிந்தோடும் கண்ணீரை
துடைத்திடும் காலந்தான் எப்போ ?
ஒன்றல்ல இரண்டல்ல
முப்பத்தாறு எம் உறவுகளின்
ஊயிர் குடித்த புத்தனின் புத்திரரே..!!
"நல்லவேளை, இன்று புத்தன் உயிரோடில்லை"
இருந்திருப்பின்..!! அவனும்
முப்பத்தாறு பயணிகளில் ஒருவனாய்
குமுதினியில் பயணித்திருந்திருப்பான்.
அவனும் தன் சீடரின்
சிரச்சேதத்துக்கு ஆளாயிருந்திருப்பான்.
மனித நாகரீகம் தெரியாத
நீசப் பிறப்பரை நம்பியவன்,
தான்என்று கௌதமனும்
அன்று ஆழிக் கொலைக்களத்தில் மடிந்திருப்பான்.
உப்புக் கடற்காற்று
உள்ளபடி வாழ்த்துரைக்க
தப்புக்கரை வாழும்
செங்கயல் இசைமீட்ட
தோட்டவெளிக் கிளிகளெல்லாம்
பூபாளம் இசைத்துவர
பொழுதின் நிமிடங்களெலாம்
பெறுமதியாய் வாழ்திருந்த
பசுத்தீவுக் கிராமமின்று
முகாரி பாடும் நிலைதான் ஏனோ ?
பொய் முகத்தை காட்டி எங்கும்
பிதற்று மொழி பேசியெல்லாம்
பழமை வாதஞ் செய்யும் நீசர்
பகல் வேஷம் கலைந்ததுவே,
பைந்தமிழர் உயிர்பறித்து
புரிந்த நாசம் உலகறியும்.
மாவிலிக் கரையில் மரணித்த உறவுகளே...
ஆழி சூழ்வலையம் உள்ள நாள்வரை
உமையெண்ணி முகாரி பாடுமே.

Shanthakumar

தலைவர்
முருகேசு சாந்தகுமார்

A.P.D.D, 24 Rue Perotin, 77500 Chelles, FRANCE. Tél : 00 33 (1) 60 08 71 99 Fax : 00 33 (1) 60 08 71 99
E – mail : apddfrance@hotmail.com Ou : 00 33 6 73 71 25 52





சர்வதேச நெடுந்தீவு ஒழுங்கமைப்பு மையம்
பிரித்தானியா

நிர்வாகத்தினர்/உறுப்பினர்கள்

20 ஆண்டுகளுக்கு முன்னர் எமது மக்கள் மீது திணிக்கப்பட்ட அடுக்குமுறைகள் அநீதிகள் வரிசையில் குமுதினிப்படகு படுகொலை தமிழ் மக்கள் வாழ்நாளில் மறக்க முடியாத அநீதியாக உள்ளது.

இந்த கொடுரப்படுகொலையில் பலியான அமைத்து மக்களையும் நினைவு கூரும் முகமாகவும் கண்டனத்தைத் தெரிவிக்கும் முகமாகவும் ஏற்பாடுசெய்துள்ள முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

இந்தச் சம்பவத்தில் பலியான மக்களின் ஆத்ம சாந்திக்காக லண்டன் கனகதுர்க்கை அம்மனை பிரார்த்தித்து இந்த நிகழ்வு சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

*S. கருணலிங்கம்*
நிர்வாக சபைத்தலைவர்

ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலயம்
5, Chapel Road
West Ealing, London
W13 9AE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உலக நீதிமன்றமே! கேள்.
தமிழ்கங்கை அழுது
சூரியன் உனக்குச் சொல்வோம்
சுந்தர மதிக்குச் சொல்வோம்
சீரிய வானே காற்றே
திசைகளே கேட்கச் சொல்வோம்
பாரினில் நீதிக் கென்றே
பயன்தரு கோட்டில் சொல்வோம்
ஊரிலே உலகந் தன்னில்
ஒப்பற்ற கொலைகள் கேளும்

நாளெலாம் பயணம் செய்யும்
நாவாய் குமுதினியில் ஏறி
ஆழிசூழ் கடலிற் சென்ற
ஆடவர் மகளிர் கூட்டம்
பாழ்படும் கடற் படையால்
படுகொலை செய்யப் பட்டு
வாழ்வினை நீத்தார் அந்தோ!
வரலாறு மறக்கலாமோ?

ஏழிலாத் தமிழே கேளாய்!
முடிந்தது இருபதாண்டு
காப்பிலா நாட்டில் வாழ்வோர்
கதைகளில் மதம் ஈதே
கூப்பிட எவரும் இல்லாக்
குமுதினிப் படகில் சென்றோர்
"சாப்பாபிலே" கிடாய்கள் போலச்
சந்தியில் வெட்டப் பட்டார்.

படகின்மேல் இருந்தோர் தம்மைப்
பரிவுடன் ஒருவராக
தடையின்றி அழைத்துக் கீழே
சாங்கமாய் இறக்கி அங்கே
திடம் கொண்டு மரமும் வெட்டும்
சிங்களக் கத்தியாலே
உடலினைக் கூறு போட்டார்
ஓவென்றார் குரலும் எங்கே?

இயந்திரம் இரைந்த தாலே
எழும் குரல் கேட்காவாறு
தந்திரம் செய்தார் மஞ்சல்
துண்டிக்கத் தாயைக் கொன்றோர்
நிந்தனைக் காட்டுவோடர்
நீசர்கள் சரணம் புத்தர்
மைந்தர்கள் எங்கள் நாட்டின்
மகிமையை உணரா மூடர்.
பாத்திரம் படைத்த நல்ல
பாவலர் வாழ்ந்த நாடு
நாத்திரம் படைத்தோர் சொல்லின்
நயத்திலே சிறந்த நாடு
பாத்திரம் அறிந்து சோறு





பங்கிடும் பாரி நாடு
கோத்திரம் கிறந்து பாலால்
குடிகளும் வளர்ந்த நாடே

கணத்திலும் பிறர்க்குத் தீமை
கருதிடாச் சானிறோர் நாடு
வனத்திலே மானைப் போல
மாகடல சூழ்ந்த நாடு
தனித்துமே பிரிந்து சென்று
தாயகம் கேட்கும் போரில்
இனத்தையே அழிப்பர் செய்த
இடர்களில் கொடிது ஈதே

சரித்திர காலம் தொட்டுத்
தரித்திரம் அறியா நாடு
விரித்திடு புகழின் வேந்தர்
விண்தொடு கோட்டை கட்டி
பிரித்திட முடியா அன்பால்
மதுரைக்குப் பாலும் வார்த்தோர்
உமைத்திடும் முப்பத்தாறு
உயிர்களை இழந்தார் ஐயோ!

மானமும் அறியார் பண்பின்
வரிசையும் அறியார் புத்தர்
ஞானமும் அறியார் கல்வி
நலன் களும் அறியார் வள்ளல்
தானமும் அறியார் செய்யும்
தவங்களும் அறியார் போதை
ஈனமும் கொலைகள் பஞ்ச
பாதகம் இனிதாய்க் கற்றார்

வீட்டினை இடிப்பார் மக்கள்
வேலியால் ஓடச் செய்வார்
தேட்டங்கள் நகைகள் காசு
சேலைகள் சுருட்டிச் செல்வார்
கேட்டிடப் புலிகள் இல்லை
கேவலம்! இலங்கைத் தேசக்
காட்டினில் வாழ்வோர்க்கிந்தக்
காற் சட்டை கொடுத்தார் யாரோ?

செவாலியர் S.A. அடைக்கலமுத்து
புலவர் அமுது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சர்வதேச நெடுந்தீவு ஒருங்கிணைப்பு மையம்
107 School Road, Tilehurst, Reading
RG31 5BH, U.K.

# வரலாற்று நினைவுகள்

அநியாயத்திலும், அடக்குமுறையிலும், காட்டுமிராண்டித்தனத்திலும் உதிரத்தை உறையவைத்து, உலகில் நிகழ்ந்த படுகொலைகள் அநந்தம். நாகரீகத்துக்கான வரைவிலக்கணங்கள் எப்படியெல்லாம் கூறப்பட்டாலும், இவை இன்னமும் தொடர்ந்துகொண்டேதானிருக்கின்றன. ஆனாலும், வரலாற்றில் இப்படித் தொடரும் கொடூரத்தில், எமது ஊர் மக்களுக்கு இழைக்கப்பட்டதுபோல், ஆழ்கடலில் ஒரு கொடூரம் உலகில் வேறெங்காவது இழைக்கப்பட்டதாக தெரியவில்லை.

இரண்டாம் உலகப்போரில், ஹிட்லரின் நாஸிப் படைகளின் படுகொலைகளையும், அப் படைகளிடமிருந்து ஐரோப்பிய நாடுகள் பெற்ற வெற்றியையும் குறித்த அறுபதாண்டு நினைவு வேளையில், இலங்கையில், தமது உரிமைகளுக்காக கிளர்ந்த மக்களுக்கு எதிரான அரச படைகளின் மிலேச்சத்தனமான நடவடிக்கைகளில் ஒன்றான 'குமுதினி படகுப் படுகொலை'யின் இருபதாண்டு நினைவும் அமைகிறது.

பெருமைமிக்க எமது ஊரின் வரலாற்றில் இடம்பெற்ற துயரம் இது. நட்ட நடுக்கடலில், சண்ட மாருதமாயத் திடீரெனவே சுழித்தடித்தார்த்த இனக்கொடூரத்தில், செய்வதறியாது தத்தளித்து, தம் உயிரைப் பலிகொடுத்து, உத்தமர்களாக - தியாகிகளாக உயர்ந்து ஓங்கும் இவர்கள், இலங்கையில், தமிழினத்தின் விடுதலை கொண்டாடப்படும் காலங்களிலெல்லாம், அந்த விடுதலையோடு இணைத்துப் போற்றப்படுவார்கள்; நினைவில் நிலைபெறுவார்கள்.

ஆக, இன்னொரு செயல்பாட்டால், நீதி நியாயப்படுத்தப்படுகிறது; உண்மை உணரவைக் கப்படுகிறது.

**நெடுந்தீவு ஒன்றியம்**
ஐக்கிய இராச்சியம்
**DELFT SOCIETY**
UNITED KINGDOM





**Pungudutheevu Welfare Association (UK)**
**புங்குடுதீவு நலன்புரிச்சங்கம் (பிரித்தானியா)**
web site: www.pungudutheevu.org e-mail: info@pungudutheevu.org
7 Beaumont Avenue,
North Harrow, Middlesex,
HA2 7AT, UK.
Tel: 020 8429 5900
Fax: 020 8429 4009
pwa

**President:**
S Kirupananthavel

**Secretary:**
T Sivapalan

**Treasurer:**
P Kailayapathivahan

**Vice President:**
A Kantharuban

**Asst. Secretary:**
K Gengakumaran

**Asst. Treasurer:**
S Sivasurathan

**Project Committee:**
K V Panchalingathurai
T Manmatharajah
K Barathithasan
V Vijayarajan
N Thevarajah
T Akilan
M Selladurai
S Premananthan
M Sivabalan

## நெஞ்சு கனக்கின்றது

தீவுப்பகுதி மக்களின் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம் என்றால் எல்லோருக்கும் ஞாபகம் வருவது குமுதினிப் படகு படுகொலையாகும்.

அரச பயங்கரவாதம் தமிழர் பகுதிகளில் தலைவிரித்தாடிய காலகட்டத்தில் தீவுப்பகுதியில் அதுவும் கடலில் நடைபெற்ற மிகவும் அநாகரிகமான, கோரத்தனமான படுகொலைச் சம்பவமாக குமுதினிப்படுகொலையினையே குறிப்பிடலாம்.

மான் சுட்டால் – அன்றி
மரை சுட்டால் ஏன் சுட்டாய்?
என்று கேட்க இந்நாட்டில் சட்டமுண்டு
கொக்குச் சுடுதல் குற்றம்
திக்கெட்டும் பயிர் அழிக்கும்
யானையைச் சுட்டால் குற்றம்
மானோடு மரைக்கிருக்கும் – சட்டம்
இந்நாட்டில் தமிழனுக்கு மட்டுமில்லை

என்பது புதவை இரத்தினதுரையின் ஆத்திரம் கலந்த ஆவேச வரிகள். அந்த வரிகள் எழுப்பிய கேள்விகள் தான் இன்று ஈழத்தமிழர்களை ஒரு தலைமையின் கீழ் உயர்த்தி நிமிர்த்தியிருக்கின்றது.

அந்த நிமிர்வில் நிற்கும் நாம் அன்றைய குமுதினிப் படுகொலை நடைபெற்று இருபது வருடங்கள் முடிவடைந்துள்ளதை ஒருகணம் நினைக்கின்ற போது நெஞ்சு கனக்கின்றது.

முப்பத்தியாறு உயிர்களை கோரத்தாண்டவமாடி பறித்தெடுத்த கடற்படையினரின் செயல் உண்மையில் கண்டிக்கப்பட வேண்டியதும், தண்டிக்கப்படவேண்டியதுமே. ஆனால் அன்று எதுவும் நடக்கவில்லை. ஆனாலும் இன்று இருபது வருடம் கடந்தும் அந்த இழந்த ஆன்மாக்களுக்கு ஆத்மசாந்தி தெரிவிக்க வாழ்விடத்திலும் சரி, புகலிடத்திலும் சரி தமிழன் இருக்கின்றான் என்றால் அதற்குக் காரணம் நாம் தேசியத்தை நேசிப்பதும், இறந்த எல்லா தமிழர் இழப்புக்களும் தேசியத்தை செழுமைப்படுத்தி உள்ளதுமே காரணமாகும்.

இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட அனைத்து உறவுகட்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

துயருறும் வேளையிலும் நாம் துணிவுடன் எழுவோம். ஒருவர் விழ ஒன்பதல்ல எண்பதாய் எழுவோம்.

வணக்கம்

புங்குடுதீவு நலன்புரிச்சங்கம்
பிரித்தானியக்கிளை

லண்டன்

05.05.2005

தலைவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் .............

## தண்ணீரில் மூழ்கிய தமிழ் இராச்சியங்கள்!!

அண்மைக்கால (கார்த்திகை 2001) புதைபொருள் அகழ்வாராய்ச்சி ஆதாரங்கள் வெளிப்படுத்திய சிந்தனையை தூண்டும் கண்டுபிடிப்புக்கள்.

- உலகத்திலேயே மிகப் பழைமைமிக்க நாகரிகம் இந்தியாவில்தான் உருவாகியது!
- தமிழர் பாரம்பரியம் மொழி கலாச்சாரம் பதினாறாயிரம் (16,000)ஆண்டுகள் தொன்மையானவை!
- யோகக்கலை இன்றைக்கு ஆறாயிரம் ஆண்டுகளாகத் தொடர்கிறது!
- பதினையாயிரம் (15,000) ஆண்டுகளுக்கு முன்னைய வெள்ளத்தால் கடலில் மூழ்கிய பண்டைக்கால கட்டிடங்கள், பொருட்களின் கண்டுபிடிப்பு!
- இந்த புதிய கண்டுபிடிப்பால் உலக சரித்திரமே மாற்றி எழுதப்படவேண்டிய நிலையிரல் உள்ளது!

உங்கள் சிந்தனைக்கு ஒரு சிறு பொறி ............. மேலே படியுங்கள் !!

**"வானதி"**
(வைத்தியகலாநிதி இரத்தினராசா)

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்துக்கு முன்தோன்றிய மூத்த தமிழ் என்று பல அறிஞர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

தமிழர்களின் புராணக் கணிப்புப்படி தமிழ் மொழி கிட்டத்தட்டப் பன்னீராயிரம் (12,000) ஆண்டுகள் பழமையானது என்று எனது தமிழ் ஆசிரியர் ஒருவர் கூறுவார். அன்று அவர் கூறியதைச் சமீபகால (2001) அகழ்வாராட்சி ஆதாரங்கள் உறுதிப்படுத்துகின்றன என்பது மிகவும் மகிழ்ச்சியான செய்தி! நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களுக்கு நாம் மிகுந்த நன்றி சொல்ல வேண்டும்.

பேராசிரியர் அரங்க முருகையன் (London) அவர்கள் தமிழ் மொழி ஐம்பதாயிரம் (50,000) வருடங்களாக பேச்சு வழக்கில் இருப்பதாகவும், எழுத்து வழக்கில்





பதினையாயிரம் (15,000) ஆண்டுகளாக இருப்பதாகவும் கூறுகிறார். **இத்தகைய பழமைவாய்ந்த எமது தமிழ் மொழியை [வடமொழி, லத்தின் (Latin) மொழிகளைப் போல] அழிந்துபோக விட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டியது தமிழர்களாகிய எமது கடமை மட்டுமல்லை, அன்னைத்துலக மக்களது கடமையும் கூட.**

இராமர் - இராவணேஸ்வரன் கதை, எமது புராணக் கணிப்புக்களின் படி எண்பத்தி இரண்டாயிரம் (82,000) வருடங்களுக்கு முன்னைய கால கட்ட கதை என்று கூறக் கேட்டிருக்கின்றேன். இதையும் நவீன விஞ்ஞானம் உறுதிப்படுத்துமா? (சமீபகாலம் வரை எமது தமிழ் புராண கால கணிப்புக்களை உலகம் புறக்கணித்தது வந்தது தெரிந்ததே).

மகாபலிபுர சிற்பங்கள், கடலின் வெள்ளத்தில் கொள்ளைபோன பெரிய நகரத்தின் மிகுதியே என்றும், அதன் எச்சங்கள் இன்றும் ஆழ்கடலில் இருப்பதாகவும் நிருபிக்கபட்டுள்ளது. இந்திரன் அந்த நகரத்தில் பொறாமைகொண்டு அந்த நகரத்தை வெள்ளம் கொண்டு அழிவை ஏற்படுத்தியதாக ஒரு பழைய கதை கூறுகிறது.

பல்லாயிரக்கணக்கான வருடங்களின் முன்பு ஒரு பிரளயம் (கடல் வெள்ளப்பெருக்கு) வந்ததாகவும், **மனு** என்று அழைக்கப்பட்ட ஒரு யோகி (ரிஷி - முனிவர்) இருந்தார் என்றும், அவர் யோகக்கலையில் வல்லவர் என்றும், அவர் மனித இனத்தை வெள்ள அழிவிலிருந்து காப்பாற்றுமுகமாக ஒரு கப்பலில் எல்லோரையும் ஏற்றி அத்துடன் தானியங்கள், மரவிதைகள், விலங்குகள் என்பவற்றையும் ஏற்றித் தண்ணீரில் மிதக்கவிட்டதாகவும் கூறப்படுகிறது. இந்தக் கப்பல் இமயமலைச்சாரலில் உள்ள ஒரு மலையுச்சியில் தரைதட்டியதாகவும், தண்ணீர் வடியும்வரை, அவர்கள் இமயமலைச்சாரலில் தற்காலிகமாகத் தங்கி இருந்து வாழ்ந்ததாகவும் கூறப்படுகிறது. அன்று இமயமலைச் சாரலில் ஆதிக் குடியிருப்புக்கள் தற்காலிகமாக இருந்தது, இன்று ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெள்ளத்திலிருந்து தப்பியவர்களால் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் கட்டப்பட்டது என்பது ஐதீகம்.

இன்றைய விஞ்ஞானக் கணிப்புக்களின்படி இன்றைக்கு பதினையாயிரம் (15,000) ஆண்டுகளுக்குமுன் பிரளய வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்போது நானூறு (400) அடி உயரத்துக்குத் தண்ணிரின் நிலை (அளவு) உயர்ந்ததாகவும் உறுதியாகி உள்ளது. இந்தக் காலகட்டதில் நிலப்பரப்புக்கள் கூடுதலாக இருந்ததும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

22ம் பக்கம் தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அஞ்சலி

15-05-1985ல் குமுதினிப் படகில்
வெட்டப்பட்டு இறந்தவர்களின் பெயர்கள்:

| | |
|---|---|
| வே. கந்தையா | த. இராஜேஸ்வரன் |
| சு. யேசுதாசன் | மு. மணிவண்ணன் |
| சி. அந்தோனி | த. அமிர்தலிங்கம் |
| இ. முருகன் | செ.சந்திரகுமார் |
| கி. எலிசம்மா | சா. குசலகுமாரி |
| ஐ. தெய்வானை | கு. கனகலிங்கம் |
| ப. யோகராசா | அ. அந்தோனிப்பிள்ளை |
| வே. சின்னையா | ஞா. தேவசகாயம்பிள்ளை |
| வை. சதாசிவம் | சி. தில்லைநாதன் |
| ந. கந்தையா | ப. நிர்மலாதேவி |
| வி. சுபாசினி | தொ. நாகேந்திரன் |
| த. சசிகலா | கு. விநாயகமூர்த்தி |
| ப. நிர்மலா | ஞா. மரியமாணிக்கம் |
| அ. அனுசியா | செ. கிறிஸ்ரினம்மா |
| இ. கனகம்மா | ப. சொர்ணம்மா |
| ப. மரியம்மா | வே. புஸ்பராணி |
| க. கார்த்தியேசு | ச. கோவிந்தன் |
| க. சதாசிவம் | ம. யேசுநாயகம் |








## நிகழ்ச்சி நிரல்: 2005

இடம்: ஆலயம்
மு.ப. 11.30:

- விசேட பூசை (மோட்ச அரிச்சனை)

இடம்: ஆலய மண்டபம்

அகவணக்கம்:
- தீப அஞ்சலி
- மலர் அஞ்சலி
- மௌன அஞ்சலி

வரவேற்புரை:
- சு. இரத்தினராசா (தலைவர்)

சிறப்பு விருந்தினர்:
- சிவ ஸ்ரீ இரகுநாத கமலநாதக்குருக்கள்
(பிரதமகுரு [illegible] நாகபூசணி அம்பாள் ஆலயம்)

- திரு அ. வேணுகோபாலன்
- திரு கா. சாந்தலிங்கம்
(இரங்கலுரை)
- ஸ்ரீ மா. யோகேஸ்வரன்
(பாட்டு)

கலை நிகழ்ச்சி:

- செல்வன் வீஸ்மன் குணசீலன்
- செல்வன் விசாகன் குணசீலன்
(வயலின் இசை)

- செல்வி அபிராமி இரத்தினராசா
(பாட்டு)
- செல்வன் மயூரன் இரத்தினராசா
(பக்க வாத்தியம் மிருதங்கம்)

- செல்வி பிரியாங்கி குமாரலிங்கம்
(வீணை இசை)

மலர்/இசைத்தட்டு (CD) வெளியீடு
(குமுதினி நினைவு பாடல்கள்)

- திரு ஜீவாகரன் டானியேல்
(நன்றியுரை)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நிலப்பரப்புக்கள் தண்ணீரில் அடிபட்டுப் போயின. பனிக்கட்டிகள் உருகியதால் வந்த வெள்ளத்தால், கடலின் அளவு உயர்ந்ததையும், பல நிலப்பரப்புக்கள் தண்ணீரில் ஆழ்ந்து போனதையும் உறுதிப்படுத்தி உள்ளனர். இதையே எமது பழைய புராணங்களும் குறிப்பாக ரிக் (இருக்கு) வேதமும் கூறுகின்றன.

"சுனாமி அலை", உயர்ந்தது பத்து (10) தொடக்கம் முப்பது (30) அடிவரைதான். அந்த அலையுடன் சில நிலப்பரப்புகள் கடலில் முற்றாக மறைந்தது அனைவருக்கும் தெரிந்ததே. நானூறு (400) அடி உயரத்திற்கு உயர்ந்த தண்ணீர் எப்படிப்பட்ட அழிவை பதினையாயிரம் (15,000) ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்திருக்கும் என்பதை கற்பனை செய்து பாருங்கள், விளங்கும்.

இந்த வெள்ளப்பெருக்குக்கு முன், அதாவது பதினையாயிரம் (15,000) ஆண்டுகளுக்கு முன் இலங்கையும் (ஈழம்) இந்தியாவும் ஒன்றாகப் பெரும் நிலப்பரப்பால் இணைத்திருந்தன. இதை **டரம்** (Durham) பல்கலைக்கழக புவியியல் ஆய்வாளராவர் (Geologist) டாக்டர் **கிளென் மில்ன் (DR. Glenn Milne)** இந்தப் படம் மூலம் விளக்கியுள்ளார. இவர் இலங்கை எல்லாத்திசைகளிலும் நீரால் சூழப்பட்டு தீவாகியது ஆறாயிரம் (6,000) வருடங்களுக்கு முன்பாகத்தான் என்று உறுதிப்படுத்துகிறார்.



படம்-1



இன்றைய நிலப்பரப்பு

முதற்சங்க காலத்தில் (படம்-1) இந்தியாவும் இலங்கையும் நிலப்பரப்பால் இணைந்திருந்ததால் இலங்கையில் தமிழர்கள் அப்போதிலிருந்து வாழ்ந்திருக்கிறார்கள். (இந்த சந்தர்ப்பத்தில் ஓர் ஆதாரத்தை நாம் புரிந்து கொள்ளலாம், அதாவது தமிழர் இலங்கையில் புர்வீகமாக அப்போதே இருந்திருக்கிறார்கள் என்பதே அது).

நான் முன்பு குறிப்பிட்ட **மதுரை மீனாட்சி கோவில்** மிகமிக பழைமை வாய்ந்த கோவிலாகும். இந்தக் கோவில் கட்டப்பட்ட கால கட்டத்தில் முதற் தமிழ்சங்கம் இருந்ததாகவும், அது வெள்ளத்தால் பதினோராயிரத்து அறுநூற்று ஆண்டுகளுக்கு (11,600) முன்





அழிக்கப்பட்டதாகவும் புராண வரலாறு கூறுவதை அமெரிக்ககல்லூரி (இந்தியா) தமிழ் துறை இயக்குனர் டாக்டர் **கரன் (DR. Haran)** விளக்கினார்.

இன்றைக்கு கிட்டத்தட்ட இரண்டாயிரத்தைனூறு (2,500) ஆண்டுகளுக்கு முன் (ஒரிசா அல்லது வங்க நாட்டில்லிருந்து) விஜயனும், அவனது ஐனூறு (500) நண்பர்களும், அவனது தந்தையால் நாடு கடத்தப்பட்டு கப்பலில் வந்து இலங்கைக் கரையை அடைந்த போது அவனை குவேனி என்னும் நாக கன்னிகை தனது நாட்டுக்குள் கூட்டிச் சென்றாள், என்பதை வெளிப்படுத்துமுகமாக சிறிலங்கா அரசாங்கம் ஒரு தபால் முத்திரை வெளியிட்டது யாவரும் அறிந்ததே. நாகர்கள், தமிழர்களே. ஈழம் முழுவதும் தமிழர்களே இருந்திருக்கிறார்கள். இவர்கள் இருந்த நிலவழம் சார்பாக இவர்களை நகர்கள், இயக்கர்கள், வேடர்கள், தேவர்கள், என்று பிரித்தார்கள் என்று திரு. **காசி. ஆனந்தன்** அவர்கள் மகாவம்சத்தைக் உதாரணம் காட்டி கூறுகிறார். விஜயன் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வந்திருந்தாலும், சிங்கள மொழி தோன்றியது. ஆயிரத்தைனூறு வருடங்களுக்கு முன்புதான் எங்கிறார் இவர். (எனவே நாம் இன்று மூன்றில் இரண்டு (2/3) நிலப்பகுதியை இழந்து நிற்கின்றோம்!).

இராமயணக் கதை நடந்த காலகட்டம், கிருஷ்ணரின் வரலாற்றுக்கு முன்னையது என்பது நாம் அறிந்ததே. இராவணன் **திருகோணமலையில்** இருந்து அரசாண்ட போது, இலங்கையும், இந்தியாவும் தரையால் இணைந்திருந்தது. இராமர் தம் நண்பன் குகனின் உதவியுடன் படகுமூலம் கங்கை வழியாக தென்கடலை அடைந்தது, இது இலகுவானதும், பாதுகாப்பான பாதையுமாக இருந்ததால் ஆகும். பின்பு அவர் பாலம் கட்டி இலங்கையை அடைந்ததும் நாம் அறிந்த கதை. (தரைமார்க்க பயணத்தில் இராமர் பல தடங்கல்களையும் இன்னல்களையும் அடைய நேரிட்டது). கங்கை முகத்துவாரத்தில் இருந்து கடல் மூலமாக இலங்கையை அடைவது தரைமார்க்கத்தைவிட இலகுவானது என்பது படத்தைக் கவனித்தால் புரியும். அத்துடன் அன்றய கடல் இன்றய கடலைவிட தண்ணீர் மட்டம் குறைவாகவே இருந்திருக்கும், எனவே பாலம் கட்டுவதும் இலகுவாக இருந்திருக்கலாம்.

இன்றைய விஞ்ஞான வளர்ச்சி இந்தப் பாரம்பரிய புராணக் கதைகள் ஓர் ஆதாரமூலத்தை ---சரித்திரங்களை மையமாகக்கொண்டு உருவானவை என்பதை உறுதிப்படுத்துகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தற்கால விஞ்ஞான ஆய்வுகளாலும் செய்மதி (செயற்கைக்கோள்) படப்பிடிப்புகளாலும் கடலின் அடியில் ஆழ்ந்து கிடக்கும் கட்டிடங்களை ஆராயக் கூடியதாக உள்ளது. எமது இந்து மகாசமுத்திரத்தில், பூம்புகார் கடலில் (70) எழுபது அடி ஆழத்தில், கரையில் இருந்து மூன்று மைல் தூரத்தில், "U" வடிவ, கிட்டத்தட்ட இரண்டு ஆள் உயர கட்டிடங்கள் கடலில் ஆழ்ந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நாற்பது (40) மீற்றர் நீளமான இது, பன்னீராயிரம் (12,000) வருடங்களுக்கு முன்பாக இருந்த சாதாராண காய்ந்த நிலப்பரப்பயிருந்த இடத்தில் (Dry Land) கட்டப்பட்டதாகும். இந்திய தேசிய கடலாராய்வாளர்களான டாக்டர் **கவர்** (DR. Gawer), திரு. **ஸ்ரீ சுந்தரேசன்** ஆகியோர் இப்படிப்பட்ட பெரிய கட்டிடங்களைக் கட்ட இந்தப் பழங்குடிமக்கள் எவ்வளவு தொழில் நுட்பம் வாய்ந்தவர்களாக அன்றே இருக்கிறார்கள் என்று தமது வியப்பை தெரிவித்தார்கள்.

இவற்றைவிட இன்றும், பல கடலில் ஆழ்ந்த கட்டிடங்கள் மகாபலிபுரக் கடலின் அடியில் இருப்பது அங்கே மீனவர்களுக்கு பலகாலமாகத் தெரிந்ததே. ஆனால் இதனை ஓர் ஆராய்ச்சியாக எடுத்துப்படிப்பதில் அந்நாட்டு அதிகாரிகளும் அறிஞர்களும் முன்வராமல் அலட்சியமாக இருப்பது மிகவும் கவலைக்குரியது. இந்த கட்டிடங்களைப் போல இன்னும் நான்கு கட்டிடங்கள் கடலுக்கடியில் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மார்கழி 26ஆம் திகதி 2004ஆம் ஆண்டு சுனாமி அலைகள் தாக்கத்தின் பின், கடலில் ஆழ்ந்திருந்த மகாவல்லிபுர கோவில் ஒன்று வெளியில் தெரிந்ததும், இதை நேரில் பார்க்க பல்லாயிரக்கண்க்கான மக்கள் நேரில் சென்று பார்த்ததும் தெரிந்ததே. இதனை TTN தமிழ் ஒளி தொலைக்காட்சியில் ஒளிபரப்பினார்கள்.

மிகப் பழைய வாய்ந்த ரிக் வேதத்தில் பல இடங்களில் சரஸ்வதி என்னும் நதியைப் பற்றியும் அதன் நதிக்கரையில் வாழ்ந்த மக்களையும் அவர்களது நாகரிகம் பற்றியும் பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஹரப்பா காலகட்டத்துக்கும் முந்திய (Pre-Harapan) நாரீக குடிகள் எனபது புராதன ஆராய்ச்சியாளர்கள் டாக்டர் **குப்தா** (DR. Gupta) அவர்களின் கருத்து. இவர் இந்தியாவின் ஜெய்ப்பூர் அரும்பொருள் நுண்ணாய்வு நிலையத்தின் ஆய்வாளர் ஆவார். இந்த **சரஸ்வதி** ஆறு பத்தாயிரம் (10,000) ஆண்டுகள் முழு வேகத்துடன் பாய்ந்தது என்றும் இது ஆறாயிரம் (6,000) ஆண்டுகளின்





முன்பே வற்றிவிட்டது என்றும் இது பாய்ந்த இடங்களின் பனிஆற்று (Glaciers) வடுக்களை செய்மதி (செயற்கைக்கோள்கள்) மூலமாக எடுத்த படங்களின் மூலம் உறுதிப்படுத்தி டாக்டர் A.K. **குப்தா** காண்பித்துள்ளார். இந்த ஆறு இமையமலையில் இருந்து தொடங்கி கிட்டத்தட்ட இருபது (20) கிலோமீட்டர் நீளத்துக்குப் பாய்ந்துள்ளது. சிந்துவெளி நாகரிக நகரமான மொஹஞ்சதாரோ நகர நாகரீகம் ஐயாயிரத்து ஐந்நூறு (5,500) வருடம் பழைமையானது.

இதிலிருந்து நாம் அறிவது என்னவென்றால், ஹரப்பன் நாகரிகத்துக்கும் முன்பான இந்த (சரஸ்வதி நதி) நாகரீகம் ரிக் வேதத்தில் சொல்லப்பட்டுள்ளதால் ரிக்வேதம் பதினோராயிரம் (11,000) ஆண்டுகளுக்கும் முன்பதாக இருக்கவேண்டும் என்று சரித்திர ஆய்வாளர் டாக்டர் N.S. **இராஜாராம்** கூறுகின்றார். இதே போல் குஜராத் மானிலத்திலும் (இந்தியாவின் மேற்குக்கடல்) ஐம்பது (50) கிலோமீட்டர் தூரத்தில் (கரையிலிருந்து) நூற்றி ஐம்பதிற்கும் (150) இருநூற்றி முப்பது (230) அடி அழத்தில் இரண்டு நகரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இது கிருஷ்ணபிரானின் துவாரகை நகராக இருக்கலாம் என எண்ணப்படுகின்றது. துவாரகை நகரம், கிருஷ்ணர் உலகை விட்டு நீங்கியதும் கடலில் மூழ்கியதாக புராணங்கள் கூறுகின்றன.

இந்த அகழ்வாராய்ச்சி இந்தியக் கடலாய்வாளர்களால் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகும். இதில் இருந்து எடுக்கப்பட்ட பொருட்களில் முக்கியமானது, முலபத்மாசனம் செய்யும் ஒரு யோகியின் சிற்பமாகும். இவற்றை ஆராய்ந்தபோது அவை எழாயிரத்து ஐந்நூறு (7500) ஆண்டுகள் பழைமைவாய்ந்தது (carbon dating) என்று உறுதி செய்துள்ளார்கள்.

இந்த கட்டிடம் நூற்றி இருபது (120) அடி ஆழக்கடலில் இருப்பதாகவும் இது எட்டு (8) கிலோமீட்டர் நீளமானது என்றும் உறுதிப்படுத்தி பேராசிரியர் டாக்டர் (DR.) **பத்திரி நாராயணன்** கூறினார். இது ஒலி அலைகளைக் கடலில் செலுத்துவதின் மூலம் (sonar reading) கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவர் இந்திய தேசிய கடல் ஆய்வு நிபுணராவார்.

அந்த தொன்மையான கால கட்டத்தில் ஒரு மனித இனம் இவ்வளவு முன்னேற்றமுடையதாக இருந்திருக்க முடியுமா என்று விஞ்ஞானிகளும் அகழ்வாராய்ச்சியாளர்களும் பிரமிக்கின்றார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்தக் கட்டுரைக்கு முக்கியமான ஆதாரம் இலண்டன் தொலைக்காட்சியில் (Channel 4) ஒளிபரப்பப்பட்ட (வெள்ளத்தில் மூழ்கிய பனிக்கால இராச்சியங்கள்) என்ற நிகழ்ச்சியில் இருந்து எடுக்கப்பட்டது. இதை திரு கிரகாம் கான்கொக் (Mr. Graham Hancock) என்பவர் உருவாக்கி வழங்கினார். அவருக்கு எமது நண்றிகள்.

இந்த ஆவணத்தை ஒளிப்பேழையாக (DVD) இல் சைவ முன்னேற்றச் சங்கம் இலண்டன் கிளையுடன் தொடர்புகொள்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம். அவர்களது விலாசம்: **Saiva Munnetta Sangam (UK), 2 salisbury Road, Manor Park, London E12 6AB; Tel: 0208 514 4732.**

ஒவ்வொரு தமிழனும் பத்திரப்படுத்தி பாதுகாக்க வேண்டிய ஆவணம் இது. (உங்கள் பிள்ளைகளுக்கும் காண்பியுங்கள்). ஒரு தமிழராவது இந்த கட்டுரை மூலம் பயனடைந்தால் அதுவே இந்த முயற்சிக்குக் கிடைத்த வெகுமதியாகும்.

நன்றி "கலசம்"

இந்தக் "தண்ணீரில் மூழ்கிய தமிழ் ராட்சியங்கள்" கட்டுரை, தண்ணீரில் மிதக்கும் "குமுதினி" படகில் இரக்கமற்ற சிங்களவரின் கொலை வெறிக்கு இரையாகிய எமது நெடுந்தீவு உறவுகளுக்கும், சுனாமி அலை தண்ணீரில் இயற்கையின் சீற்றத்திற்க்கு இரையாகிய எமது மக்களுக்கும் சமர்ப்பணம்.

"விழுந்த நாம் மீண்டும் எழுவோமாக"-- இது திண்ணம்

### தமிழின் தனித்துவம் "ழ" கரத்தில் இருக்கிறது

தமிழைத் தமிழாக பேசும் போது, சரியாக உச்சரிக்கும் போது நாக்கு அண்ணத்தை தொட வேண்டும். இப்படி உச்சரிக்கும் போது குரல்வளைக்கும் மூச்சுக் குழலுக்கும் பயிற்ச்சி நடப்பதால், இப்படி சரியாகப் பேசுபவர் நீண்ட ஆயுளுடன் வாழ்வார் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எனவே நாம் தமிழைத் தமிழாக், பேசுவோம், எழுதுவோம். "தமிழ் ஈழம்" என்று.

"THAMIZL EEZLAM"

வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய ஈழ, பாரத தமிழ் திருநாடுகள்.










தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net








குமுதினி 2005









தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net














தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



TIME Travel TOURS

SriLankan Airlines

*PRIMIER TRAVEL AGENT*

*GOLD WINNER 2002 - 2003*

*(Srilankan Air Lines)*

உங்கள் அனைத்து பயணத் தேவைகளுக்கும் நாடவேண்டிய நம்பிக்கையான நல்லதோர் ஸ்தாபனம்

New Jaffna branch opening in 2005 in partnership with Sri Lankan Airlines at Hospital Road

ABTA ATOL IATA

**Call now for the best fares to colombo & worldWide destinations**

*020 8907 6969*
*136 Kenton Road*
*Harrow Middlesex*
*HA3 8AZ*
*FAX: 020 8907 8333*

*020 8429 8333*
*432 Alexandra Avenue*
*Rayners Lane*
*Harrow Middlesex*
*HA2 9TW*

*All major credit cards accepted*

*info&ucanfly.co.uk | www.ucanfly.co.uk*

SERVICE & RELIABILITY





இலங்கை இந்திய உணவுப்பொருட்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

# KSP SUPER FOOD

Whole salers & retailers of Sri lankan & Indian products

இலங்கை, இந்திய, ஆபிரிக்கா உணவுப்பொருட்கள், உடன் மரக்கறி வகைகள், கடலுணவுப்பொருட்கள், குளிர்பானங்கள், மதுபானங்கள், குறைந்த விலையில் தொலைபேசி அட்டைகள் மற்றும் அனைத்துத் தேவைகளையும் ஒரே இடத்தில், மலிவாக எம்மிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.





Cut Price Phone Cards



318 High Street North
Manor Park, London
E12 6PS

Tel: 0208 471 7806
Fax: 0208 552 0300
Mob: 0795 836 0176

EELAVAN GRAPHICS 0798 543 1797



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net















தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net











தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# VEE KAY AUTOS

**Contact : Vagan / Ashraf / Aytach**

48, Belfast Road, London, N16 6UH.

**Tel : 020 8806 1965**

**Mobile : 07951 296 218**

**Fax : 020 8806 0161**

* MOT
* TYRES
* BRAKES
* CLUTCHES
* SERVICING
* OVERHAULS
* CAR ELECTRICALS
* TRACKING & BALANCING
* ALL TYPES OF REPAIRS




Printed by Vasan Printers 020 8646 2885

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்